STC.83/2025
PW1 – ரவிந்திரநாத்
நாள் 23.02.2026 05.30 P.M.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். இந்த மனு தாக்கல் செய்த போது நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேனா என்றால் இல்லை. எனது அண்ணன் மனைவி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். இந்த வழக்கின் புகார் மனு வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் விவரங்களை கூறினேன். பின்னர் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது. என்னுடைய புகார் மனுவில் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்போது நான் ஊராட்சி மன்ற துணைத்தலைவராக இருந்தேன். அதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. என்னிடம் காட்டப்படுவது நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் என்றால் சரிதான். அதை நான் படித்துதான் கையொப்பம் போட்டேன். நிரூபண வாக்குமூலத்திலும் நான் ஊராட்சி மன்ற தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த புகார் மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் பணம் எந்த ஊரில் எந்த இடத்தில் வைத்து குறிப்பிடவில்லை என்றால் பெரியகுளத்தில் உள்ள எனது வீடு என்று குறிப்பிட்டுள்ளேன். எனக்கும் எதிரிக்கும் நேரடியாக பழக்கம் இல்லை என்றால் சரிதான். எனது புகார் மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் எதிரிக்கு பணம் கொடுத்ததாக பத்து லட்ச ரூபாய் பணமானது எந்த வகையை சேர்ந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

3. எனது புகார் மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் யார் முன்னிலையில் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சாந்தி என்பவர் முன்னிலையில் கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காசோயில் உள்ள எதிரியின் கையொப்பம் எதிரியின் வங்கி கணக்கில் உள்ள கையொப்பத்துடன் ஒத்துப்போகவில்லை

என்ற காரணத்திற்காக காசோலை திருப்பபட்டது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொத்தை எதிரியுடையதுதான் என்று நிரூபிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்குகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/சாதுசிவசுப்பிரமணியன்,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர்,<br>
கடலாடி